**ஜூலை – 13**

# TNPSC துளிகள்

- அபிருப் பட்டாச்சாரியா எழுதிய "சவ்ரவ்வைப் போன்ற வெற்றி: கங்குலியைப் போன்ற சிந்தனை மற்றும் வெற்றி" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. சவ்ரவ் கங்குலி திறமைமிகு இளைஞர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையின் பலனாக இந்தியா சிறந்த கிரிக்கெட் வீரர்களைப் பெற்றுள்ளது என்று இந்நூல் கூறுகிறது.
    - இதற்கு முன்னர் அபிருப் பட்டாச்சாரியா "விராட்டைப் போன்ற வெற்றி: கோலியைப் போன்று சிந்தனை மற்றும் வெற்றி" என்ற நூலை எழுதியுள்ளார்.
- மத்திய அரசின் சிந்தனைச் சாவடியான நிதி ஆயோக் 'தேசிய சுகாதார அடுக்கு' என்ற பகிர்ந்து கொள்ளப்பட்ட டிஜிட்டல் சுகாதார கட்டமைப்பிற்கான செயல்திட்டத்தை வெளியிட்டுள்ளது. நாட்டில் மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் தலைமைத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் மற்றும் இதர பொது சுகாதார திட்டங்கள் வரிசையில் இந்த செயல்திட்டம் அமைந்துள்ளது.
- புது தில்லியில் 2018ஆம் ஆண்டு செப்டம்பர் 16 முதல் 18ஆம் தேதி வரை மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் முதல்முறையாக 'இந்திய சுற்றுலா சந்தையை (India Tourism Mart) நடத்த இருக்கிறது. இந்திய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சங்கங்களின் கூட்டமைப்புகள் (FAITH - Federation of Association in Indian Tourism and Hospitality) என்ற அமைப்புடன் இணைந்து இந்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் இந்நிகழ்ச்சியை நடத்துகிறது.
- மேற்கு இரயில்வேயின் ராஜ்காட் பிரிவில் முதலாவது இரட்டை அடுக்குள்ள சரக்குக் கொள்கலன் சேவையை இந்திய இரயில்வே அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த இரட்டை அடுக்குள்ள சரக்குக் கொள்கலன் பயன்பாட்டின் மூலம், அப்பிரிவின் செலவு கணிசமாகக் குறைக்கப்படும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு லோக் ஆயுக்தா மசோதா - 2018

- அலுவலகப் பணியாளர் மற்றும் நிர்வாகத்துறை அமைச்சர் D.ஜெயக்குமார் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு லோக் ஆயுக்தா மசோதா, 2018 ற்கு தமிழ்நாடு சட்டசபை ஜூலை 09, 2018 அன்று அனுமதி அளித்துள்ளது.
- ஜூலை, 10-ல் லோக் ஆயுக்தா அமைப்பதற்கான உச்சநீதிமன்றத்தின் காலக் கெடுவினை அடுத்து தமிழக அரசு இந்நடவடிக்கையினை எடுத்துள்ளது.
- நான்கு வருட காலத்தில் நடைபெற்ற ஊழலின் புகார்கள் லோக் ஆயுக்தா புகாரின் பேரில் பதிவு செய்யப்படும்.
- இந்த மசோதாவின் படி, கையூட்டுக்கெதிரான குழுவை உயர்நீதிமன்றத்தின் அமர்வு நீதிபதி (அ) ஓய்வுப் பெற்ற நீதிபதி (அ) ஊழலுக்கெதிரான திட்டங்கள், பொது நிர்வாகம், லஞ்ச ஒழிப்பு, நீதி மற்றும் சட்டம் ஆகியவற்றில் 25 வருடங்கள் அனுபவம் உள்ள நபர் தலைமை தாங்குவார்.
- ஊழலுக்கெதிரான மக்கள் குறைகேட்கும் குழுவில், இரண்டு நீதித்துறை உறுப்பினர்களுடன் நான்கு உறுப்பினர்கள் இருப்பர்.

### *உறுப்பினர்களின் நியமனம்*

- ❖ தேர்வுக் குழுவின் பரிந்துரையின்படி இதன் தலைவர் மற்றும் உறுப்பினர்களை ஆளுநர் நியமிப்பார்.
- ❖ இந்த தேர்வுக்குழு, முதலமைச்சரைத் தலைவராகவும் சட்டசபை சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சியின் தலைவர் (அ) சட்ட சபையிலுள்ள பெரிய ஒற்றை எதிர்க்கட்சியின் தலைவர் ஆகியவர்களையும் கொண்டது.

### *லோக் ஆயுக்தாவின் அதிகாரங்கள்*

- ❖ எந்தவொரு நபரையும் வரவழைக்கவும் ஆய்வு செய்யவும் உறுதிச் சான்றிற்கான ஆதாரங்களைப் பெறவும் லோக் ஆயுக்தா அதிகாரம் கொண்டுள்ளது.
- ❖ CrPC (Criminal Procedure Code), 1908-ன் கீழ் இவ்வமைப்பின் விசாரணைப் பிரிவு சிவில் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.
- ❖ லோக் ஆயுக்தா மசோதாவிற்கு 2013ம் ஆண்டு மத்திய அரசாங்கம் அனுமதி அளித்தது. 2014-ம் ஆண்டு லோக் ஆயுக்தா மசோதாவினை அறிவித்தது.
- ❖ ஒவ்வொரு மாநிலமும் லோக் ஆயுக்தா என்று அறியப்படும் அமைப்பை உருவாக்கலாம் என்று லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா மசோதா, 2013 கூறுகிறது.

# தேசியச் செய்திகள்

## 15 வது ப்ரவாசி பாரதிய திவாஸ்

- ❖ 15 வது ப்ரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டினை ஜனவரி 2019-ல் நடத்துவதற்கு உத்திரப் பிரதேச மாநில அரசுடன் இணைந்து வெளியுறவுத் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.
- ❖ 2019 நிகழ்வின் கருத்துரு, "புதிய இந்தியாவை உருவாக்குவதில் இந்திய வம்சாவளியினரின் பங்கு".
- ❖ தாய்நாட்டை நோக்கிய அயல்நாட்டு இந்திய சமூகத்தினரின் பங்களிப்பினை அடையாளம் காணுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 9 அன்று ப்ரவாசி பாரதிய திவாஸ் கொண்டாடப்படுகிறது.

## உயர் புகழ் நிலை பெற்ற நிறுவனங்கள்

- ❖ மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் 6 கல்வி நிறுவனங்களுக்கு உயர் புகழ் நிறுவனம் (Institution of Eminence - IOE) என்ற நிலையினை வழங்கியுள்ளது.
- ❖ பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து 3 நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களிலிருந்து 3 நிறுவனங்கள் ஆகியவை இதிலடங்கும்.

| பொதுத்துறை | தனியார் துறை |
|---|---|
| இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூரு, கர்நாடகா (Indian Institute of Science - IISC) | பிர்லா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், பிலானி, ராஜஸ்தான் (Birla Institution of Technology & Sciences) |

| | |
|---|---|
| இந்திய தொழில்நுட்ப நிறுவனம், மும்பை, மகாராஷ்ட்ரா (Indian Institute of Technology - IIT) | மணிப்பால் உயர்கல்விக்கான அகாடமி, மணிப்பால், கர்நாடகா<br>(Manipal Academy of Higher Education) |
| இந்திய தொழில்நுட்ப நிறுவனம், டெல்லி (Indian Institute of Technology - IIT) | பசுமை நிலத் திட்டத்தின் (Green field Project) கீழ் பூனாவிலுள்ள ரிலையன்ஸ் பவுண்டேஷனின் ஜியோ நிறுவனம் (மகாராஷ்டிரா). |

- முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் N.கோபாலசுவாமி தலைமையில் அமைந்த அதிகாரமளிக்கப்பட்ட நிபுணர் குழு இந்நிறுவனங்களை தேர்வு செய்தது.





- பல்கலைக்கழக மானியக் குழு இத்திட்டத்தினை உருவாக்கியது.

# மாநிலச் செய்திகள்

## சமய சிறுபான்மையினர் நிலை - யூதர்கள்

- யூதர்களுக்கு சமய சிறுபான்மையினர் நிலையை வழங்கி இந்தியாவில் மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்ட்ராவிற்குப் பிறகு குஜராத் மூன்றாவது மாநிலமாகி உள்ளது.
- இது தொடர்பாக மாநிலத்தின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இதற்கான அரசு தீர்மானத்தை அளித்துள்ளது.




- இதனுடன் மாநிலத்தில் ஏழு சமய சிறுபான்மையினர்கள் உள்ளனர். மற்ற ஆறு சிறுபான்மையினர்கள்- இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், புத்தர்கள், பாரசீகர்கள் மற்றும் ஜெயின் மதத்தவர்கள்
- பத்து வருடங்களுக்கு முன்பு மேற்கு வங்காளம் யூதர்களுக்கு சிறுபான்மையினர் நிலையினை வழங்கியது. மகாராஷ்ட்ரா 2017-ல் யூதர்களுக்கு சிறுபான்மையினர் நிலையினை வழங்கியது.
- இந்திய யூதர்கள் சமூகம், இஸ்ரேல், ஆசிய ரஷ்யா மற்றும் ஈரான் ஆகியவற்றையடுத்து நான்காவது பெரிய ஆசிய யூதர்கள் கொண்ட சமூகம் ஆகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அனுஷ்கா சர்மாவின் பேசும் சிலை

- பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மா, சிங்கப்பூரில் உள்ள மேடம் துசாட்ஸில் பேசும் சிலை வைக்கும் அந்தஸ்தைப் பெற்ற முதல் இந்திய பிரமுகராகி உள்ளார்.
- அனுஷ்காவின் மெழுகு சிலை பேசும் திறனையும் கொண்டதாகும். பேசும் மெழுகு சிலை என்ற வகையில் அந்த அருங்காட்சியகத்தில் இது முதல் சிலையாக உள்ளது.



- சிங்கப்பூர் ஈர்ப்பினைப் பெற்ற உலக திருவுருவச் சிலைப் பட்டியலில் இணைந்த ஓப்ரா வின்ஃப்ரே, கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் லூயிஸ் ஹாமில்டன் ஆகியோருடன் அனுஷ்காவும் இப்பட்டியலில் இணைந்திருக்கிறார்.

### இந்திய பல்கலைக் கழக சங்கத்தின் தலைவர் (Association of Indian Universities - AIU)

- SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் துணை வேந்தர் டாக்டர். சந்தீப் சஞ்சேட்டி டெல்லியிலுள்ள இந்திய பல்கலைக்கழக சங்கத்தின் (AIU) தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார்.
- இந்திய பல்கலைக் கழக சங்கம், 1925ல் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையேயான கழகமாக அறியப்பட்டது.
- துணைவேந்தர் சார்பில் தற்பொழுது 720 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை AIU கொண்டுள்ளது. மேலும் AIU இந்தியாவில் உள்ள எல்லா பல்கலைக்கழகங்களின் பிரதிநிதியாகவும் காணப்படுகிறது.
- AIU பல்கலைக் கழகங்களுக்கிடையே ஒத்துழைப்பு மற்றும் ஒன்றுக்கொன்று ஒத்த கலந்தாய்வினை எளிதாக்குகிறது. அதே போல் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பாளராகவும் இது செயலாற்றுகிறது.

## விளையாட்டுச் செய்திகள்

### ஒலிம்பிக் பதக்க மேடை இலக்குத் திட்டம்

- மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் ஒலிம்பிக் பணிப் பிரிவானது இந்தியாவின் ஒட்டு மொத்த ஆண்களுக்கான ஹாக்கி அணியை ஒலிம்பிக் பதக்க மேடை இலக்குத் திட்டத்தின் கீழ் சேர்த்துள்ளது (Target Olympic Podium Scheme)
- ஒட்டு மொத்த அணியும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவது இதுவே முதன் முறையாகும். இதற்கு முன்னர் வெவ்வெறு விளையாட்டுகளிலிருந்து தனித்தனி

வீரர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தனர்.

- 18 பேர் கொண்ட இந்திய ஆண்கள் ஹாக்கி அணி ஒலிம்பிக் பதக்க மேடை இலக்கத் திட்டத்தின் கீழ் ஒவ்வொருவரும் மாதாந்திர உதவித் தொகையாக ரூ. 50,000 பெறுவர்.
- தேசிய விளையாட்டு அபிவிருத்தி நிதியின் (National Sports Development fund) வரம்பிற்குட்பட்டு விளையாட்டுத் துறை அமைச்சகம் ஒலிம்பிக் பதக்க மேடை இலக்கு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ஒலிம்பிக் பணிப் பிரிவில் உறுப்பினர்களாக உள்ள இந்தியாவின் விளையாட்டு ஆணையம் மற்றும் கூட்டமைப்புகள் இத்திட்டத்தின் கீழ் நிதியை பிரித்து வழங்குவதற்கான ஒப்புதல் அளிக்கும் குழுக்களாகும்.
- இத்திட்டத்தின் கீழ் 2020 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வாய்ப்புகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றை அறிந்து உதவி செய்வதற்காக அபினவ் பிந்த்ரா குழு அமைக்கப்பட்டது.

# இதரச் செய்திகள்

## சாத்தி கைபேசி உதவி மையம்

- மத்திய ரிசர்வ் போலீஸ் படையானது புனித குகைக் கோவிலான அமர்நாத் குகைக் கோவிலுக்கு ஆண்டுதோறும் யாத்திரை செல்லும் யாத்ரீகர்களுக்காக சாத்தி என்ற கைபேசி உதவி மையத்தைத் தொடங்கியுள்ளது.
- சாத்தி கைபேசி உதவி மையத்தின் பணியாளர்கள் ஜம்முவில் உள்ள வெவ்வேறு முகாம்களுக்கு சென்று அங்குள்ளவர்களுக்கு பாதுகாப்பு தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியதைப் பற்றித் தெரிவிப்பர்.

- - - - - - - - - - - - - - -